பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். *205* **நாள்: *29.05.2023***

திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட எம்.பி.எம். தெரு மயான பூமியில் மேம்பாட்டு பணிகள் நடைபெற உள்ளதால், பொதுமக்கள் தாங்கல் மயான பூமியை பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், கோட்டம்-*71*க்குட்பட்ட எம்.பி.எம். தெருவில் உள்ள மயான பூமியின் எரிவாயு தகன மேடையினை திரவ பெட்ரோலிய தகன மேடையாக *(LPG)* மாற்றம் செய்ய மேம்பாட்டு பணிகள் நடைபெற உள்ளதால், *31.05.2023* முதல் *30.07.2023* வரை மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, மேம்பாட்டு பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள வார்டு-*67*க்குட்பட்ட தாங்கல் மயான பூமியினை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி